# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.140/2021

பி.வா.சா.1 – முதல் விசாரணை தொடர்ச்சி– நாள் 08–06–2026.

பெயர் = மாரியம்மாள் பி.வா.சா.1

பிவா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி–

இந்த வழக்கில் நான் ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து முதல் நிலை சாட்சியம் அளித்துள்ளேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) 06.06.1978ம் தேதியில் உடையார் என்பவர் செல்லையா மனைவி லட்சுமி அம்மாளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் சார்பதிவக நகல் **பி.வா.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 16.10.2003 தேதிய 2ம் பிரதிவாதிக்கு செல்லையாவின் மகன் தர்மராஜ் எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) சர்வே எண்.1089/1க்குரிய எஸ்.எல்.ஆர் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டி பிரார்த்திக்கிறேன்.

வாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S